

நேற்று (11.07.2024) தலைமைச் செயலகத்தில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் தமிழ்நாட்டில் தொன்மையான தேவாலயங்களை பழுது பார்த்தல் மற்றும் புனரமைத்தலுக்கான நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், தேவாலய நிர்வாகிகளிடம் காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்வின் போது பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் சி.விஜயராஜ்குமார், சிறுபான்மை நல இயக்குநர் திருமதி மு. ஆசியா மரியம், ஆகியோர் உடனிருந்தனர்.

## காசா மீது விமானத் தாக்குதல்!

காஸா, ஜூலை 12 –

காஸா மீதான தாக்குதலை இஸ்ரேல் தீவிரபடுத்தி உள்ளது. காஸாவில் உள்ள டெய்ர் அல் பலா அகதிகள் முகாம் அருகே உள்ள வீடுகளின் மீது நேற்று காலையில் இஸ்ரேல் விமான தாக்குதல் நடத்தியதில் 5 சிறுவர்கள் உட்பட 12 பேர் உயிரிழந்தனர். அதை தொடர்ந்து டெய்ர் அல் பலாவின் இன்னொரு பகுதியில் இஸ்ரேல் விமான படை தாக்குதலில் ஒரு சிறுவன் உட்பட 8 பேர் பலியானார்கள்.



முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (11.7.2024) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நடைபெற்றுவரும் பல்பேறு பணிகள் குறித்தும், கடந்தாண்டு அறிவித்த அறிவிப்புகளின் நிலை குறித்தும், 2024–2025ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் மீதான புதிய அறிவிப்புகளின் செயல்பாடுகள் குறித்தும் துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சேலம் அணைமேடு பகுதியில் ரூ. 92.40 கோடி மதிப்பீட்டில் மேம்பாலம்!

## அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்!

சேலம்,ஜூலை.12-

சேலம், அணைமேடு பகுதியில் ரூ. 92.40 கோடி மதிப்பீட்டில் கட்டிமுடிக்கப்பட்டுள்ள இரயில்வே மேம்பாலத்தினை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு அவர்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு நேற்று (11.07.2024) திறந்து வைத்தார்.

அமைச்சர் கே.என். நேரு அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாடு மக்களின் நலனுக்காக பல்வேறு சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், இன்றைய தினம் சேலம், அணைமேடு பகுதியில் சேலம் டவுன் மற்றும் சேலம் கிழக்கு இரயில்வே நிலையங்களை இணைக்கும் வகையில் திருமணிமுத்தாற்றின் குறுக்கே ரூ. 92.40 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள இரயில்வே சாலை மேம்பாலம் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சேலம் புதிய புறவழிச்சாலை கி.மீ. 2/2-இல் இரயில்வே கி.மீ. 189/400-500-இல் உள்ள இரயில்வே கடவு எண். 183-க்கு பதிலாக சேலம் டவுன் மற்றும் சேலம் கிழக்கு இரயில் நிலையங்களுக்கு இடையில் 650 மீட்டர் நீளத்திற்கு ரூ.92.40 கோடியில் பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் சாலை மேம்பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, நில எடுப்புப் பணிகள், மின் கம்பங்கள் மற்றும் குடிநீர் குழாய்கள் மாற்றியமைக்கும் பணிகள் மற்றும் திருமணி முத்தாற்றின் குறுக்கே பாலத்தூண்கள் அமைத்தல் போன்ற பல்வேறு கடிமான பணிகள் முடிக்கப்பட்டு தற்போது பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும், சேலத்திற்கு மாநகராட்சி சார்பில் ரூ.150 கோடி மதிப்பிலான மேம்பாலப் பணிக்கு சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, சேலத்தில் உள்ள நீர் நிலைகளை மேம்படுத்தும் வகையில் ஏரிகளை சீரமைக்கவும், நீர் ஆதாரத்தை பெருக்கவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, 3 நீர் நிலைகள் சீரமைக்கப்படுகின்றன.

சேலம் மாவட்டத்தில் அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் இதுபோன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் தொடர்ச்சியாகச் செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், இன்றையதினம் திறந்து வைக்கப்பட்டுள்ள இரயில்வே மேம்பாலம் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ள முறையில் அமைந்துள்ளது.

இவ்வாறு அமைச்சர் கே.என். நேரு பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ. இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி, சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. இராஜேந்திரன், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சதாசிவம், மாநகராட்சி ஆணையாளர் சீ. பாலச்சந்தர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) லலித் ஆதித்ய நீலம், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ. மேனகா, உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி.ஆக்ரிதி சேத்தி, மாநகர காவல் துணை ஆணையர்கள் திருமதி.எஸ்.பிருந்தா, மதிவாணன், சேலம் வருவாய் கோட்டாட்சியர் அம்பாயிரநாதன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம், மாநகராட்சி துணை மேயர் திருமதி மா. சாரதாதேவி, நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் துரை, உதவி கோட்டப் பொறியாளர் தேசய்யா உள்ளிட்ட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# கலைஞரை இழிவுசெய்யும் கயவர்களே - எச்சரிக்கை!

## சுப.வீரபாண்டியன் இன்று கண்டித்து அன்பகத்தில் உரையாற்றுகிறார்!

தன் வாழ்நாள் முழுவதும் தமிழுக்கும் தமிழர்களுக்கும் தொண்டாற்றிய தகைசால் பெருந்தகை முத்தமிழறிஞர் கலைஞர் இழி சொற்களால் ஏசியும் பாடியும் வரும் சிலரின் செயல்கள் அநாகரிகமானவை, ஆபத்தானவையும் கூட.

பொறுப்பும் கண்ணியமுமற்ற இப்படிப்பட்ட சிலரைக் கண்டித்து, இன்று (12.07.2024) இரவு 7 மணிக்கு, சென்னை, தேனாம்பேட்டை, அன்பகத்தில், திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தலைவர் சுப. வீரபாண்டியன் கண்டன உரை ஆற்ற இருக்கிறார்!

கழக உணர்வாளர்களும், கலைஞர் மீது மாறாத பற்றுக் கொண்டவர்களும் பெருந்திரளாய்க் கூட்டத்திற்கு வருக என்று திராவிட இயக்கத் தமிழர் பேரவை அழைக்கிறது!

கலைஞர் ஒரு நெருப்பு! எந்தக் கரையானாலும் அதை அரித்துவிட முடியாது என்பதைக் காலம் சொல்லும் என்கிறார் சுப. வீரபாண்டியன்.

## நீட் தேர்வை ரத்து செய்ய ஒன்றிய அரசை வலியுறுத்தி

# இருசக்கர வாகன பரப்புரை பயணத்தை வரவேற்று, மாபெரும் பொதுக்கூட்டம்!

### திருவண்ணாமலையில் கு.பிச்சாண்டி, சே.மெ.மதிவதனி, டாக்டர் எ.வ.வே.கம்பன் பங்கேற்பு!

திருவண்ணாமலை, ஜூலை 12-

நீட் தேர்வை ரத்து செய்ய ஒன்றிய அரசை வலியுறுத்தி, திருவண்ணாமலை மாவட்ட திராவிடர் கழக இளைஞர் அணி மற்றும் திராவிட மாணவர் சங்கம் சார்பில் இரு சக்கர வாகன பரப்புரை பயணத்தை வரவேற்று மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது. பொதுக்கூட்டத்தில் சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, திராவிடர் கழக துணை பொதுச் செயலாளர் சே.மெ.மதிவதனி, கழக மருத்துவரணித் துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே. கம்பன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்.

நாளை 13.07.2024 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு திருவண்ணாமலை அண்ணா சிலை அருகில் நீட் தேர்வை ரத்து செய்ய ஒன்றிய அரசை வலியுறுத்தி, திருவண்ணாமலை மாவட்ட திராவிடர் கழக இளைஞர் அணி மற்றும் திராவிட மாணவர் சங்கம் சார்பில் இரு சக்கர வாகன பரப்புரை பயணத்தை வரவேற்று மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

பொதுக்கூட்டத்திற்கு மாவட்டத் திராவிடர் கழகத் தலைவர் சி.மூர்த்தி தலைமை வகிக்கிறார். மாவட்டச் செயலாளர் மு.க.இராம்குமார், ப.அண்ணாதாசன், மாவட்ட இளைஞரணித் தலைவர் வழக்கறிஞர் க.சங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நகர தி.மு.க. செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார். திராவிடர் கழக காப்பாளர் பி.பட்டாபிராமன் தொடக்கவுரையாற்றுகிறார்.

பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு, சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி கருத்துரை வழங்கி உரையாற்றுகிறார்.

பொதுக்கூட்டத்தில் திராவிடர் கழக துணைப் பொதுச்செயலாளர் வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி, கழக மருத்துவரணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், மாநில திராவிடர் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் தம்பி பிரபாகரன், கோ.வேலு ஆகியோர் வாழ்த்தி பேசுகின்றனர்.

பொதுக்கூட்டத்தில் காங்கிரஸ் மாவட்டத் தலைவர் ஜி.குமார், ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் சீனி. கார்த்திகேயன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் எம். சிவக்குமார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் இரா.தங்கராஜ், விடுதலைச் சிறுத்தைகள் மாவட்ட தலைவர் ச.நியூட்டன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் மாவட்டத் தலைவர் ஐ.எம்.சுலைமான், மனிதநேய மக்கள் கட்சி ஏ.ஆர்.நாசர் உசேன், திருவண்ணாமலை தெற்கு மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, மாவட்டப் பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணைச் செயலாளர்கள் பிரியா ப. விஜயரங்கன், விஜயலட்சுமிரமேஷ், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் பார்வதி சீனுவாசன், தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் க.சௌந்தரராசன், நகரமன்றத் தலைவர் நிர்மலாவேல்மாறன், ஒன்றியக் குழுத் தலைவர்கள் கலைவாணி கலைமணி, பரிமளாகலையரசன், ஒன்றியச் செயலாளர்கள் மெய்யூர் ந.சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ஆராஞ்சி ஏ.எஸ்.ஆறுமுகம், வி.பி. அண்ணாமலை, சி.மாரிமுத்து, இரா.ராஜேந்திரன், பா.ராமஜெயம் மற்றும் தோழமை இயக்க நிர்வாகிகள், திராவிடர் கழக நிர்வாகிகள், பகுத்தறிவாளர் கழகம், முதுகலை வாசகர் வட்டம் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

நிறைவாக நகர திராவிடர் கழகத் தலைவர் மு.காமராஜ் நன்றி கூறுகிறார்.

கூட்ட ஏற்பாட்டினை திருவண்ணாமலை மாவட்ட திராவிடர் கழகம் செய்து வருகிறது.



தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ்.முருகன் தலைமையில் வீட்டு வசதி வாரியக் கூட்டம் கோயம்பேடு வாரியத் தலைமை அலுவலகத்தில் நேற்று (11.07.2024) நடைபெற்றது. இதில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசு செயலாளர் காகர்லா உஷா, வீட்டு வசதி வாரிய மேலாண்மை இயக்குனர் சமீரன், நிதித்துறை துணைச் செயலாளர் சிபி ஆதித்யா செந்தில் குமார், நகர ஊரமைப்பு இயக்க துறை இயக்குநர் கணேசன், வாரிய செயலாளர் மற்றும் பணியாளர் அலுவலர் (பொறுப்பு) புண்ணியகோடி, வாரிய நிதி ஆலோசகர் அன்பழகன், தலைமைப் பொறியாளர்கள் கண்ணன், சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ஃபர்கத் பேகம், பெருநகர சென்னை மாநகராட்சி மாவட்ட வருவாய் அலுவலர் சரவணமூர்த்தி உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## முதலமைச்சர் தொடங்கி வைத்த புதிய பேருந்துகள் மூலமாக

# சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஒருநாள் சுற்றுலாத் தொகுப்பு பயணங்கள்!

## அமைச்சர் கா.இராமச்சந்திரன் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 12-

முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த புதிய பேருந்துகள் மூலமாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஒரு நாள் சுற்றுலா தொகுப்பு பயணங்கள் மேற்கொண்டு நீங்காத நினைவுகளை மனதில் பதிவு செய்ய பொதுமக்களுக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் அழைப்பு விடுத்துள்ளார்.

சென்னை வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், படகு குழாம்கள் குறித்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாளர்கள் மற்றும் மண்டல மேலாளர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் (9.7.2024) நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர்.பி.சந்தரமோகன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது,

**முத்தமிழறிஞர் கலைஞரால் உருவாக்கப்பட்ட சுற்றுலா கழகம்!**

தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கை அளித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை



1971 ஆம் ஆண்டில் உருவாக்கினார்கள். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், சுற்றுலா பயணத் திட்டங்கள், சுற்றுலா பேருந்து சேவைகள், படகு சேவைகள், தொலைநோக்கி இல்லங்கள் என குறைந்த செலவில் சுற்றுலா பயணிகளுக்கு பல்வேறு சுற்றுலா சேவைகளை வழங்கி வருகின்றது. முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை இந்தியாவிலேயே சுற்றுலா பயணிகளின் விருப்பமான முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல் படுத்தி வருகின்றார். ஓட்டல் தமிழ்நாடு உணவகங்களை பொதுமக்கள் எளிதில் அடையாளம் கண்டறியும் வகையில் அமுதகம் என்று பெயர் சூட்டி யுள்ளார்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத காட்சிகளை மனதில் பதிவு செய்ய பல்வேறு சுற்றுலா பயணத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

**ஒருநாள் சென்னை சுற்றுலா தொகுப்பு!**

ஒரு நாள் சென்னை மாமல்லபுரம் சுற்றுலா பயணத்தில் வாலாஜா சாலை சுற்றுலா வளாகத்தில் இருந்து காலை 9.00 மணிக்குப் புறப்படும் பேருந்து திருவான்மியூர் மருந்தீஸ்வரர் திருக்கோவில், சோழிங்கநல்லூர் இஸ்கான் டெம்பிள், முட்டுக் காடு தட்சண சித்ரா பாரம்பரிய அருங்காட்சியகம், முட்டுக்காடு படகு குழாம், சென்னை முதலைக் காப்பகம், சாளுவன்குப்பம் புலிக்குடை வரை, மாமல்லபுரம் ஐந்து ரதம், கடற்கரை கோவில், அர்ஜுனன் தபசு ஆகிய இடங்களை சுற்றுலா பயணிகள் பார்வையிட்ட பின்னர் இரவு 7.00 மணிக்கு சுற்றுலா வளாகத்தை வந்தடையும்.

ஒரு நாள் காஞ்சிபுரம் - மாமல்லபுரம் சுற்றுலா பயணத்தில் வாலாஜா சாலை சுற்றுலா வளாகத்தில் இருந்து காலை 6.30 மணிக்குப் புறப்படும் பேருந்து ஏகாம்பரநாதர் திருக்கோவில், காஞ்சி காமாட்சி அம்மன் திருக்கோவில், வரதராஜ பெருமாள் திருக்கோவில், கைத்தறி பட்டு அங்காடிகள் செல்லுதல், மாமல்லபுரம் ஐந்து ரதம், கடற்கரை கோவில், அர்ஜுனன் தபசு, வெண்ணை உருண்டை பாறை, முட்டுக்காடு படகு குழாம் ஆகிய இடங்களை சுற்றுலா பயணிகள் பார்வையிட்ட பின்னர் இரவு 7.00 மணிக்கு சுற்றுலா வளாகத்தை வந்தடையும்.

**ஒருநாள் பாண்டிச்சேரி தொகுப்பு பயணங்கள்!**

ஒரு நாள் பாண்டிச்சேரி சுற்றுலா பயணத்தில் வாலாஜா சாலை சுற்றுலா வளாகத்தில் இருந்து காலை 6.30 மணிக்குப் புறப்படும் பேருந்து புகழ்பெற்ற ஆரோவில் சுற்றுலாத்தலம், பாண்டிச்சேரி அருங்காட்சியகம், பாண்டிச்சேரி கடற்கரை, அரவிந்தர் ஆசிரமம், முதலியார் குப்பம் படகு குழாம் ஆகிய இடங்களை சுற்றுலா பயணிகள் பார்வையிட்ட பின்னர் இரவு 7.00 மணிக்கு சுற்றுலா வளாகத்தை வந்தடையும்.

இந்த சுற்றுலா பயணத் திட்டங்களை மேற்கொள்ள 10 இருக்கைகளுக்கு மேல் சேர்ந்தாற் போல் முன்பதிவு செய் பவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு கட்டணச் சலுகை அளிக்கப்படுகின்றது.

சுற்றுலா பயணிகளின் பயணத்திற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2 வால்வோ ரக சொகுசு பேருந்துகள், 5 அதிநவீன சொகுசு பேருந்துகள் என குறுகிய காலத்தில் 7 பேருந்துகளை தொடங்கி வைத்துள்ளார்கள். முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த புதிய பேருந்துகள் மூலமாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஒரு நாள் சுற்றுலா தொகுப்பு பயணங்களை உறவினர்களுடன் மேற்கொண்டு நீங்காத நினைவுகளை பொது மக்கள் மனதில் பதிவு செய்ய வேண்டும் என சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் திருமதி.ச.கவிதா உள்பட தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மண்டல மேலாளர்கள், மேலாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

## ‘தலித்துகளை பா.ஜ.க. புறக்கணிக்கிறது!’

# கர்நாடக பா.ஜ.க. எம்.பி. குற்றச்சாட்டு!

பெங்களூரு, ஜூலை 12 -

தலித்துகளை பா.ஜ.க. புறக்கணிப்பதாக மக்களவைக்கு 7 முறை தேர்ந்தெடுக்கப்பட்ட கர்நாடக பா.ஜ.க. எம்.பி. ரமேஷ் ஜிகன்ஜினாகி குற்றம் சாட்டி உள்ளார்.

கடந்த மக்களவைத் தேர்தலில் கர்நாடக மாநிலம் விஜயபுரா தொகுதியில் போட்டியிட்ட ரமேஷ் ஜிகன்ஜினாகி, ஏழாவது முறையாக வெற்றி பெற்றார்.

மேலும் பிரதமர் மோடியின் முதல் அமைச்சரவையில் குடிநீர் மற்றும் சுகாதார துறை இணை அமைச்சராக பதவி வகித்தார். இம்முறை ஒன்றிய அமைச்சர் பதவி கிடைக்கும் என்று எதிர்பார்த்தார். ஆனால், கிடைக்கவில்லை.

இதனால் அதிருப்தி அடைந்த அவர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது, தென்னிந்தியாவில் இருந்து 7 முறை நாடாளுமன்றத்துக்கு தேர்வான ஒரே தலித் எம்.பி. தான்தான் என்றும் உயர் சாதி எம்.பி.க்களுக்கு கேபினட் பதவி கொடுக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால், தான் தலித் என்பதால் பா.ஜ.க. தன்னை புறக்கணிப்பதாகவும் குற்றம் சாட்டினார்.

மக்களவைக்கு 7 முறை தேர்வான தனக்கு ஏன் கேபினட் அமைச்சர் பதவி கொடுக்கவில்லை? தலித்துகளை பா.ஜ.க. ஆதரிக்காதது ஏன்? என கேள்விகளை எழுப்பிய ரமேஷ் ஜிகன்ஜினாகி, கர்நாடகா பா.ஜ.க.வில் சிலர், தனக்கு எதிராக செயல்படுவதாகவும் புகார் தெரிவித்தார்.